14.11.2024

O.S.No.35/2018

வா.சா.1.திருமதி. தங்கலெட்சுமி க/பெ. ஹரிகிருஷ்ணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை

நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்க தெரியும். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். என் தாயாருக்கு மொத்தம் 4 பெண் மக்கள். அதில் நான் கடைசி பெண் ஆவேன். எனக்கு 2009 ல் திருமணம் நடைபெற்றது. நான் திருமணத்திற்கு பின்பு தெற்கு வாசலில் குடியிருந்து வருகிறேன். திருமணத்திற்கு முன்பு தாயாருடன் கதவு எண் 715 ல் வசித்து வந்தேன். என் தாயார் கிரையம் வாங்கியபோது எனக்கு நேரடியாக தெரியும். வண்டியூர் கிராம சர்வே எண். 261/1 ல் கட்டுப்பட்ட சென்ட் 83 ல் மேல்புறம் சென்ட் 45 3/4 இடத்தை பல்வேறு பிளாட்டாக பிரித்ததில் எனது தாயார் 5 ம் நம்பர் பிளாட் வாங்கியதாக வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 45 3/4 சென்ட் நிலத்தை லேஅவுட்ஆக பிரித்தற்கான பிளானை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த லேஅவுட் அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்டதாக சொல்லப்படும் லேஅவுட் பிளான் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயார் கிரையம் பெற்ற பிளாட் எண் 5த்திற்கு தென்புறம் பிளாட் எண் 6 உள்ளது என்றால் சரிதான். பிளாட் எண் 6 ற்கான கிரைய ஆவணம் தான் வா.சா.ஆ 3 என்றால் சரிதான். பிளாட் எண் 6 ல் 600 சதுர அடி மட்டுமே கிரையம் வாங்கப்பட்டடுள்ளது என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ 3 கிரைய ஆவணத்தில் 6 ம் நம்பர் பிளாட்டில் 600 சதுர அடிமணையும் அதன் தென்புறமும் கீழ்புறமும் உள்ள ரோடுகளுக்காக இந்த மனைக்குறிய ஈவு 310 சதுர அடியும் சேர்த்து மொத்தம் 910 சதுர அடி கிரையம் பெற்றுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அதேபோல் வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ 4 ஆவணங்களில் கிழக்கு பக்கம் 10 அடி சந்து உள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான். அதே போல் வா.சா.ஆ 3, வா.சா.ஆ 4 ஆவணங்களில் பிளாட் நம்பர் 6 க்கு தென்புறம் 20 அடி ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன கீழ்புறம் உள்ள 10 அடி சந்தும் தென்புறம் உள்ள 20 அடி ரோடும்

சரியான அளவுகளில் ஸ்தலத்தில் உள்ளன என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்களில் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்தபோது நான் உடன் இருந்தேன். 5ம் நம்பர் பிளாட்டிற்கு தென்புறமும், 6 ம் நம்பர் பிளாட்டிற்கு கீழ்புறமும் 7 ம் நம்பர் பிளாட் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணத்தில் மேற்கு நான்கு மாலாக தேவி கிரையம் பெற்ற 7 ம் நம்பர் பிளாட் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 7 ம் நம்பர் பிளாட்காரர்கள் வடகிழக்கு மூலையில் போர் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை எங்களிடம் கொடுத்துவிட்டார்கள். பிராதில் உள்ள மாதிரி வரைபடத்தில் DEFG பகுதிக்கு நேர் மேற்குபுறம் போர்வெல் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி போர்வெல் போடப்பட்ட இடத்தை எங்களிடம் என்று தெரிந்து எங்கள் வசம் அவர்கள் ஒப்படைத்துவிட்டார்கள் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் இருக்கா என்றால் ஆவணம் எதுவும் இல்லை. பிரதிவாதி பிளாட் நம்பர் 6 ரை 2013 ல் கிரையம் பெற்று 2016 ல் கட்டிடம் கட்ட ஆரம்பித்தார். மேற்படி சங்கதியை பிராதிலோ என்னுடைய நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி 2013 ஆம் ஆண்டே பிளாட் நம்பர் 6 ல் கட்டிடம் கட்டி முடித்துவிட்டார் என்றாலும் இது சம்மந்தமாக இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை நாங்கள் எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2016 ல் தான் பிரதிவாதி பிளாட் நம்பர் 6 ல் கட்டிடம் கட்டினார் என்று பின்யோசனையின் பேரில் காலவரையறை சட்டத்திற்கு உட்பட்டு இந்த வழக்கை காட்டுவதற்காக நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி நான் கூறுவதுபோல் எங்கள் இடத்தில் எவ்வித ஆக்கிமிப்பு செய்யவில்லை என்றாலும், அவருடைய இடத்திற்குள் தான் அவர் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் பிரதிவாதி ஆட்சேபணையை கருத்தில் கொள்ளாமல் தவறான விபரங்களோடு தன் அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் தாயார் கோரும் எந்த பரிகாரமும் இந்த வழக்கில் கிடைக்கத்தக்கது இல்லை என்றாலும், இவ்வழக்கை தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றாலும் சரியல்ல.